بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் *11/03/2022* அன்று *U.K* - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு தொடர் - 13**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ - أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ -

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿١﴾ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ﴿٢﴾ اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿٣﴾ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ﴿٤﴾ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ﴿٥﴾

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ﴿٦﴾ صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ﴿٧﴾

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு கிலாஃபத்துக்குப் பிறகு எதிர்கொள்ள நேர்ந்த கடினங்களைப் பற்றி எடுத்துரைக்கப்பட்டு வருகிறது. அவற்றில் முதலாவது கடினமாக எடுத்துரைக்கப்பட்டு வந்தது, ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களது மரணத்தின் கவலை ஆகும். அது பலவீனமான மற்றும் ஆபத்தான சூழ்நிலையாக இருந்தது. அச்சமயம் அனைத்து சஹாபிகளும் கவலையின் காரணத்தினால் பித்துப் பிடித்தவர்களைப் போல் இருந்தார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், முஹம்மது (ஸல்) அவர்கள் வஃபாத் ஆகிவிட்டார்கள் என்று யாராவது கூறினால், நான் அவரது தலையை உடலில் இருந்து அகற்றி விடுவேன் என்று கூறி வாளை ஏந்தியவாறு நின்று கொண்டிருந்தார்கள். அச்சமயம் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், எவர்கள் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை வணங்கி வந்தார்களோ அவர்கள் கேட்டுக் கொள்ளட்டும்! முஹம்மது (ஸல்) அவர்கள் மரணித்து விட்டார்கள். மேலும், எவர்கள் அல்லாஹுத் தஆலாவை நேசிக்கிறார்களோ அவர்கள் அல்லாஹுத்தஆலா உயிருடன் இருக்கின்றான்; ஒருபோதும் மரணிக்க மாட்டான் என்று மகிழ்ந்து கொள்ளுங்கள்! என்று கூறினார்கள். அன்னாருக்கு ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் மீது அளவற்ற நேசம் இருந்தது. இருந்தும் அன்னார் ஏகத்துவத்தின் பாடத்தை புகட்டினார்கள். முழு தைரியத்துடனும் மதிநுட்பத்துடன் ஸஹாபிகளை ஓர் அணியில் இணைய வைத்தார்கள். **ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களது வாழ்வை பற்றி ஸஹாபிகளின் உள்ளத்தில் உருவாகியிருந்த சிந்தனைகளை அன்னார் [ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி)] ஒரு பொதுக்கூட்டத்தில் திருக்குர்ஆனின் வசனத்தின் ஆதாரத்தால் களைந்தார்கள்.

அன்னார் ஆற்றிய இரண்டாவது பெரும் பணி, கிலாஃபத் தேர்ந்தெடுக்கப்பட்ட சமயத்தில் முஸ்லிம் சமுதாயத்தை ஒற்றுமையின் சரடில் ஒன்று சேர்த்தது ஆகும். ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களது மரணத்திற்குப் பிறகு உருவாகியிருந்த மற்றுமொரு அபாயம், ஸகீஃபா பனூ ஸாயிதாவில் கூடியிருந்த அன்ஸாரின் கூட்டமாகும். முஹாஜிர்களிலிருந்து கலீஃபா தேர்ந்தெடுக்கப்படுவதை அன்ஸார் எவ்விதத்திலும் ஏற்றுக்கொள்ள தயாராக இருக்கவில்லை. இந்த இக்கட்டான தருணத்தில் அல்லாஹுத்தஆலா, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களது நாவினால் எவ்வாறான தாக்கத்தை உருவாக்கினான் என்றால், கருத்து வேறுபாடு மற்றும் வேற்றுமை ஆகியவை நேசம் மற்றும் ஒற்றுமையாக மாறி விட்டது.

அன்னார் உடனடியாக சரி செய்த மூன்றாவது பெரும் விவகாரம், ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்களது படையை புறப்பட செய்யும் விவகாரம் ஆகும். இந்தப் படையை சிரியாவின் எல்லைப் பகுதியில் ரோமானியர்களுடன் சண்டையிடுவதற்கு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் ஆயத்தம் செய்திருந்தார்கள். இந்த படையின் தலைமைப் பொறுப்பை ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்களிடம் ஒப்படைத்தவாறு ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் உஸாமா அவர்களிடம் விளக்கமான வழிகாட்டல்களையும் வழங்கினார்கள். அதேபோன்று ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் தனது அருளுக்குரிய கரங்களால் ஒரு கொடியையும் கட்டினார்கள். அந்த படையில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி), ஹஸ்ரத் உமர் (ரலி) போன்ற பெரும் ஸஹாபிகளும் இணைந்திருந்தனர். இந்த சிறுவன் பெரும் முஹாஜிர் ஸஹாபிகளுக்கு அமீராக நியமிக்கப்படுகிறார் என்று சில மக்கள் பேசியபோது, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் மிகவும் கோபமுற்றார்கள். ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்கள் படையுடன் புறப்பட்ட நேரத்தில் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் தமது இறுதி நோயால் பீடிக்கப்பட்டிருந்தார்கள். ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களது வஃபாத் ஆனபோது இந்த படை ஜுர்ஃப் அல்லது ஸீ கஷப் என்ற இடத்திலிருந்து மதீனா திரும்பி வந்தது. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் பைஅத் செய்யப்பட்டபோது, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் உஸாமாவின் படைக்கு இடப்பட்ட பணியை முழுமைப்படுத்த வேண்டும் என்றும் உஸாமாவின் படையைச் சார்ந்த எவரும் மதீனாவில் எஞ்சி இருக்கக்கூடாது என்றும் கட்டளையிட்டார்கள். இந்த படையின் எண்ணிக்கை 3000 ஆக இருந்தது என்று கூறப்படுகிறது. மற்றுமொரு அறிவிப்பில், 700 வீரர்கள் இருந்தார்கள் என்றும் கூறப்படுகிறது. ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களின் வஃபாத்தின் போது அரேபிய கோத்திரங்களில் முர்தத்களின் குழப்பம் பரவிக்கொண்டிருந்தது. அதேநேரம் யூதர்களும் கிறிஸ்தவர்களும் தங்களது தலையை உயர்த்தி பார்க்க ஆரம்பித்தார்கள். அச்சூழ்நிலையில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் இந்த படையை நிறுத்தி வைக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டது. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இறைவன் மீது ஆணையிட்டு, மிருகங்கள் என்னை குதறி தின்றுவிடும் என்று எனக்கு உறுதி ஏற்பட்டு விட்டாலும் கூட நான் உஸாமாவின் படை குறித்து ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் செயல்படுத்திய தீர்மானத்தை நிறைவேற்றியே தீருவேன் என்று கூறினார்கள்.

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் உஸாமாவின் படை புறப்பட்டு சென்றதன் பின்னணியைப் பற்றி எடுத்துரைத்தவாறு கூறுகிறார்கள்:** ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களது வஃபாத்திற்கு பிறகு, அபூ கஹாஃபாவின் மகன் முதல் பணியாக, ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் புறப்பட கட்டளையிட்ட படையை நிறுத்த வேண்டும் என்று நாடுகிறீர்களா? இறைவன் மீது ஆணையாக! எதிரிகளின் படைகள் மதீனாவிற்குள் நுழைந்து, நாய்கள் முஸ்லிம் பெண்களின் உடல்களை இழுத்துச் சென்றாலும் கூட நான் இந்த படையை தடுக்க மாட்டேன் என்று கூறினார்கள்........ இந்த தைரியமும் வீரமும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் உருவானதன் காரணம், இறைவன் கூறுகிறான்:

مُحَمَّدٌ رَّسُوْلُ اللّٰهِ ؕ وَالَّذِيْنَ مَعَهٗۤ اَشِدَّآءُ عَلَى الْكُفَّارِ

மின்சாரத்துடன் சாதாரண கம்பி சேர்ந்துவிடும்போது அதில் மாபெரும் ஆற்றல் உருவாகி விடுவதுபோல் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடனான

தொடர்பின் விளைவாக அன்னாரை ஏற்றுக் கொண்டவர்களும், أَشِدَّآءُ عَلَى الْكُفَّارِ (காஃபிர்களுக்கெதிராக கடினமானவர்களைப்) போன்று ஆகிவிட்டார்கள்.

**ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் உஸாமாவின் படை புறப்பட்டதைக் குறித்து ஸிர்ருல் கிலாஃபா எனும் நூலில் கூறுகிறார்கள்:** ஹஸ்ரத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களது மரணம் நிகழ்ந்த போது இந்த செய்தி மக்காவுக்கும் அங்குள்ள கவர்னர் அத்தாப் பின் உஸைது அவர்களுக்கு கிடைத்ததும் அத்தாப் தலைமறைவானார். மக்கா நடுங்கி விட்டது. மக்கா வாழ் மக்கள் முர்த்ததாகும் அபாயம் ஏற்பட விருந்தது.

அச்சூழ்நிலையில் மக்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் கூறி உஸாமாவின் படையை புறப்படுவதில் இருந்தும் தடுங்கள். அல்லது படையை அனுப்புவீர்கள் என்றால், உஸாமாவை விட அதிக வயதுடைய வேறு எவரையாவது தலைவராக நியமியுங்கள் என்று விண்ணப்பித்தார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இந்த விஷயத்தை ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் தெரிவித்தபோது அன்னார் உமர் அவர்களின் தாடியைப் பிடித்து, இப்னு கத்தாபே! உமது தாய் உம்மை தொலைக்கட்டும்! ஹஸ்ரத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் அவரை அமீராக நியமித்துள்ளார்கள். நான் அவரை தலைமையில் இருந்து விலக்க வேண்டும் என்று நீங்கள் என்னிடம் கூறுகிறீர்களா? என்று கேட்டார்கள்.

இந்த படை புறப்படும் காட்சியும் மிகவும் வியப்பிற்குரியதாக இருந்தது. அச்சமயம் ஹஸ்ரத் உஸாமா சவாரி செய்து கொண்டிருந்தார்கள். அப்போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் நடந்து சென்று கொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் உஸாமா (ரலி) அவர்களிடம், தாங்கள் பொருத்தமானதாகக் கருதினால் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை எனது பணிகளில் ஒத்துழைப்பிற்காக விட்டு விடுங்கள் என்று கூறினார்கள். ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்கள் அனுமதி வழங்கினார்கள். அதற்குப் பிறகு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்களை எப்போது சந்தித்தாலும், அஸ்ஸலாமு அலைக்க அய்யுஹல் அமீர் என்றே கூறுவார்கள்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் உஸாமாவின் படையை அனுப்பும்போது உரையாற்றியவாறு கூறினார்கள்: நான் உங்களுக்கு 10 விஷயங்களைப் பற்றி அறிவுரை கூறுகிறேன். நீங்கள் துரோகம் செய்யாதீர்கள். போர் செல்வங்களை திருடாதீர்கள். உடன்படிக்கையை மீறாதீர்கள். (போரில் எதிரிகளின்) சடலங்களை சிதைக்காதீர்கள். எந்தவொரு சிறு பிள்ளையையும் முதியோரையும் பெண்ணையும் கொல்லாதீர்கள். பழம் தரும் எந்த மரத்தையும் வெட்டாதீர்கள். ஆடு மாடு மற்றும் ஒட்டகத்தை உணவுக்காக அன்றி அறுக்காதீர்கள். தேவாலயங்களுக்காக அர்ப்பணிக்கப்பட்ட பாதிரியார்களை விட்டுவிடுங்கள். உங்களிடம் எவரேனும் உணவு வழங்கினால், பிஸ்மில்லாஹ் என்று கூறி உண்ணுங்கள். தங்களது தலையில் நடுப்பகுதியில் உள்ள முடிகளை மழித்துக்கொண்டு நாலாபுறமும் மழிக்காமல் வைத்திருப்பவர்களை விட்டுவிடாதீர்கள்.

இவர்கள் முஸ்லிம்களுக்கு எதிராக போருக்காக தூண்டுபவர்கள் ஆவார்கள். அத்துடன், போரில் கலந்து கொள்ளும் மக்கள் ஆவார்கள்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்களிடம், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் உங்களுக்கு இட்ட கட்டளையை அவசியம் நிறைவேற்றுங்கள் என்று கூறினார்கள். இந்த படை ரபீவுல் அவ்வலின் இறுதியில் புறப்பட்டது. 20 இரவுகள் பயணித்த பிறகு அஹ்லே உப்னா மீது திடீரென்று

தாக்குதல் தொடுத்து அவர்களிடம் முந்தைய அநீதிக்குப் பதிலடி கொடுப்பதில் வெற்றி பெற்றார்கள். பெருமளவில் போர் செல்வங்களை கைப்பற்றி ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்கள் மதீனா திரும்பி வந்த போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் முஹாஜிர்கள் மற்றும் மதீனாவாசிகளுடன் அவர்களை சந்திக்க வெளியே வந்தார்கள்.

உஸாமாவின் படையெடுத்தலினால், நீண்ட கால விளைவுகள் வெளிப்பட்டன. கலீஃபாவின் தீர்மானம் சமயத்துக்கு ஏற்ப எவ்வளவு பயனுள்ளதாக இருந்தது என்பதை பல மக்கள் தெரிந்து கொண்டார்கள். மேலும் அவர்கள், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மிக ஆழமான பார்வை கொண்டவரும் ஞானம் மிக்கவரும் தொலைநோக்குப் பார்வையுடையவரும் ஆவார்கள் என்பதை தெரிந்து கொண்டார்கள். அரேபிய கோத்திரங்களில் முஸ்லிம்கள் மீதான திகில் உணர்வு ஏற்பட்டுவிட்டது. அரேபிய எல்லைகளில் கண் வைத்திருந்த அந்நிய நாட்டினர் மீது முஸ்லிம்கள் மீதான அச்சம் ஏற்பட்டது.

பிரசித்திபெற்ற வரலாற்றாசிரியர் சர் தாமஸ் வாக்கர் ஆர்னல்ட் அவர்கள், முஸ்லிம்கள் சிரியா, ஈரான் மற்றும் வட ஆப்பிரிக்கா மீது ஆதிக்கம் செலுத்தவும் தொன்மையான பாரசீக ஆட்சியை முடிவுக்கு கொண்டு வரவும் ரோமானிய ஆட்சியின் பிடியிலிருந்த சிறந்த மாநிலங்களை விடுவிக்கவும் காரணமாக அமைந்த சிறப்புமிகு திட்டங்களுள் முதலாவது திட்டமாக இது இருந்தது என்று எழுதியுள்ளார்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் சந்தித்த மற்றுமொரு சவால், ஸகாத் கொடுக்க மறுத்தோரின் குழப்பம் ஆகும். முர்தத்களின் பல்வேறு தோற்றங்களில் ஒரு தோற்றம், மக்கள் இஸ்லாத்தில் நிலைத்திருந்தாலும் ஸகாத் கடமையாக்கப்படுவதையும் அதனை கலீஃபாவுக்கு வழங்கும் அவசியத்தையும் மறுத்தார்கள். பெரும் ஸஹாபிகளிடம் ஆலோசனை செய்த பிறகு, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், அல்லாஹ்வின் மீதாணையாக! ஸகாத்தை வழங்க மறுப்பவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடைய காலத்தில் கொடுத்து வந்திருந்த ஒரு கயிற்றையும் கொடுக்க மறுத்தால், நான் அவர்களுடன் போர் புரிவேன் என்று கூறினார்கள்.

*ஸகாத் வழங்க மறுத்தோரின் நடவடிக்கை, அவர்களுடனான போர் மற்றும் அதன் விளைவுகள் தொடர்பாக இனி வரும் நாள்களில் எடுத்துரைப்பதாகக் கூறிய பிறகு, ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:* இன்று மீண்டும் நான், உலகின் தற்போதைய சூழ்நிலை தொடர்பாக துஆவுக்காக கூற விரும்புகிறேன். இறைவன் இருதரப்பு அரசாங்கங்களுக்கும் அறிவை வழங்குவானாக! இம்மக்கள் மனிதர்களின் இரத்தத்தை சிந்துவதிலிருந்தும் விலகி இருப்பார்களாக! எவ்வாறு இம்மக்கள் ஒன்றிணைந்து விட்டார்கள் (என்பதைப் கண்டு) முஸ்லிம்களும் இந்த போரில் இருந்து பாடம் கற்றுக் கொள்ளவேண்டும். ஆனால் முஸ்லிம்கள் ஒரே கலிமாவை கூறினாலும் ஒருபோதும் ஒன்றுபடுவதில்லை. ஒரு நாட்டை அழிக்கச் செய்தார்கள். ஈராக்கை அழிக்கச் செய்தார்கள். ஏமன் அழிக்கப்படுகிறது. ஒன்றுபடுவதற்கு பதிலாக, மற்றவர்கள் மூலமாகவும் செய்ய வைக்கிறார்கள்; தானும் செய்கிறார்கள். குறைந்தபட்சம் முஸ்லிம்கள் இந்த ஒற்றுமையின் பாடத்தையாவது அவர்களிடமிருந்து கற்க வேண்டும். அல்லாஹுத்தஆலா முஸ்லிம் சமுதாயத்தின் மீதும் கருணை புரிவானாக! முஸ்லிம்கள் மீதும் கருணை புரிவானாக! முஸ்லிம் உம்மத்தின் மீதும் கருணை புரிவானாக! அல்லாஹுத்தஆலா இக்காலகட்டத்தில் எந்த நோக்கத்திற்காக இக்காலத்தின் இமாமை அனுப்பியுள்ளானோ அந்த இமாமை ஏற்றுக்கொள்பவர்களாகவும் இவர்கள் ஆனால்தான் இது நடக்க முடியும். அல்லாஹுத்தஆலா அறிவை வழங்குவானாக! புரிதலை வழங்குவானாக! இவர்கள்

**தனது நிலையை சீர்படுத்திக் கொள்கின்ற அதேவேளையில், தங்களது தொடர்புகள் மற்றும் காரணிகளை பயன்படுத்தி உலகை போரிலிருந்து தடுப்பவர்களாகவும் ஆக வேண்டும்; போரில் பங்கு பெறுபவர்களாக ஆகிவிடக் கூடாது என உலகிற்காகவும் நாம் துஆ செய்ய வேண்டும்.**

*குத்பாவின் இறுதியில் ஹுஸூர் அவர்கள் லாஹூரைச் சேர்ந்த ஸஃபர் இக்பால் ஹாஷ்மி ஸாஹிப் அவர்களின் மனைவி ஸய்யிதா கைஸரா ஸஃபர் ஹாஷ்மி ஸாஹிபா அவர்களின் நற்குறிப்பை எடுத்துரைத்தவாறு அவர்களுக்கான ஜனாஸா காயிப் தொழுகையைத் தொழ வைப்பதாக அறிவித்தார்கள்.* **மர்ஹூமா அவர்கள், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஸஹாபி ஹஸ்ரத் சைய்யது முஹம்மது அலீ புகாரி சாஹிப் அவர்களின் மகன் வழி பேத்தி ஆவார்கள். மர்ஹூமா அவர்கள் ஜமாஅத்திற்கு தொண்டாற்றக் கூடிய, தொழுகை மற்றும் நோன்பை பேணக்கூடிய, துஆக்கள் செய்யக்கூடிய, விருந்து உபசரிப்பு செய்யக்கூடிய, மிகவும் பொறுமையான, நன்றி உணர்வுடைய பெண்ணாக இருந்தார்கள். மர்ஹூமா அவர்கள், கணவர் மற்றும் ஐந்து மகன்களையும் ஒரு மகளையும் பின் விட்டுச் சென்றுள்ளார்கள். மர்ஹூமாவின் ஒரு மகன் முஹம்மது இக்பால் ஹாஷ்மி ஸாஹிப் இறைவழியில் கைதாகி தற்போது லாகூரில் உள்ள கேம்ப் சிறைச்சாலையில் உள்ளார்கள். அவர்களுக்கு சிறைச்சாலையை விட்டு வெளியே வர அனுமதி கிடைக்கவில்லை. ஆயினும், நிர்வாகம் சற்று மென்மை காட்டியவாறு, அவர்களின் தாயாரின் உடலை சிறைச்சாலை எடுத்துச் சென்று இறுதியாக ஒருமுறை பார்க்கச் செய்தார்கள். அல்லாஹ் அவர்கள் விரைவாக விடுதலை பெறுவதற்கான ஏற்பாட்டையும் செய்வானாக!**

*ஹுஸூர் அவர்கள் மர்ஹூமாவின் பாவமன்னிப்பிற்காகவும், அந்தஸ்து உயர்வுக்காகவும் துஆ செய்தார்கள்.*

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ

لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِىَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رحمكم الله اِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ

وَاِيْتَآءِ ذِى الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

**(தமிழாக்கம்: மவ்லவி சுல்தான் மைதீன்)**